# ஈழத்துப் பூக்கள்



மானிலா

1
லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூபாளத்துப் பூக்கள்

## மானிலா

வெளியீடு.,
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பூபாளத்துப் பூக்கள் | – | கவிதைத் தொகுப்பு |
| நூலாசிரியர் | – | மானிலா |
| முதற்பதிப்பு | – | 09.01.2001 |
| வெளியீடு | – | வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் |

விலை

| | | |
|---|---|---|
| இலங்கை | – | 40/= |
| வெளிநாடு | – | 10$ |

"POOPHALATHTHUP POOKKAL"

Collection of poems by MANILA

First Edition 09 - January - 2001

Published by :

VAVUNIYA KALAI ELAKKIYA NANPARKAL VADDAM
SRI LANKA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் இதயம் இனிக்கிறது !

ஓடிக் கொண்டிருக்கும் கால வெள்ளத்துடன் எதிர் நீச்சல் போட்டு உங்களுடன் பேசத் துடிக்கிறது இலக்கிய இதயமொன்று
ஆம் !
என் இலக்கியப் பயணத்தின்
இடையினில் - இந்த
இனிய வன்னி மண்ணுடன்
இணைந்து கொள்ளும்
இனிய சந்தர்ப்பம்
என் வாழ்வில்
எதிர் பாராமல் பொருந்தி வந்தது !

யாழ் நகரில் 88ம் ஆண்டளவில் மலர ஆரம்பித்த என் கவிதைப் பூக்கள் பல பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வாசம் வீச ஆரம்பித்தன.

92ம் ஆண்டளவில் வெளியான எனது கவிதைகள் அனைத்தும் ஈழத்தின் பிரபல்யமான எழுத்தாளர்களில் ஒருவரான திரு. செம்பியன் செல்வன் அவர்களின்

தலைமையில் "காலக்குயில்" எனும் கவிதைத் தொகுதியாக யாழ் நாவலர் மண்டபத்தில் என் முதல் நூல் வெளியீடு இனிதே இடம்பெற்றது. வன்னி மண்ணில் இடம்பெறும் இந்தப் பூபாளத்துப் பூக்கள் எனது இரண்டாவது நூல் வெளியீடு. இந்த வெளியீடு இனிய வன்னி மண்ணில் இடம் பெறுவதை நினைத்து என் இதயம் சந்தோஷ மழையில் நனைகிறது!

நான் வாழும் சமுதாயத்தில் நான் தரிசித்த பிரச்சினைகளின் மையமே "பூபாளத்துப் பூக்கள்"

இந்தப் பூக்கள் சமூகத்தின் புதிய விடியலை நாடி பூபாளம் பாடி நிற்கிறது !

இந்த வன்னி மண்ணில் - என்
இலக்கிய வெளியீடு ஒன்று
அரங்கேறுவதை நினைத்து -என்
இதயத்தின் எண்ணங்கள்
இனிய
சங்கீத மேகங்களாய்
சங்கமிக்கின்றன !

என் கவிதைகளில் சோகமும் சந்தோஷமும் கைகோர்த்துச சங்கீதம் பாடுகின்றன.... இந்தப் பூபாளத்துப் பூக்கள் சமுதாயத்தில் புதிய மாற்றத்தை அரங்கேற்றுவதற்காய் அங்கலாய்க்கின்றது. சமுதாயத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள் வாழும் தேசத்தின் அவலநிலை, காதல், பெண்ணெழுச்சி, இப்படியான பலதரப்பட்ட கருத்துக்களைத் தாங்கி இந்தப் பூபாளத்துப் பூக்கள் மலர்ந்திருப்பது மறுமலர்ச்சி ஒன்றைத் தேடியே! நான் பேனாவைத் தேடினேனா இல்லை பேனா என்னைத் தேடியதா? என்ற கேள்வியில் சிக்கித் தவிக்கிறேன்.....

பூபாளத்துப் பூக்கள்
என் வாழ்க்கையில்
எதிர்பாராமல்
ஏற்பட்ட சந்தோஷ விபத்து !





இந்தப் பூபாளத்துப் பூக்கள் உங்கள்
கைகளில் தவழ்ந்து
கண்களுக்கு விருந்தளித்து
இதயங்களை இசையினில்
நனைக்கப் போவதை
நினைந்து - என்
இதயம் இனிக்கிறது !

இப் பூபாளத்துப் பூக்கள் எந்தத் தடையும் இன்றி மலர்ந்து மணம் வீச எனக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்புத் தந்த வன்னி மண்ணின் இளைய இசைக் கலைஞன் ஜெயந்தன், வன்னி மண்ணுக்கு பெருமை சேர்க்கும் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் இவர்களுடன் என் ஆரம்ப காலங்களில் என் வளர்ச்சியில் பங்கு கொண்ட ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர்களில் ஒருவரான திரு. செம்பியன் செல்வன், வி.பி. ஜோசப் பாலா, ஓவியர் இராசையா இவர்களுடன் இந்த இனிய வன்னி மண்ணை எனக்கு அறிமுகம் செய்து பூபாளத்துப் பூக்களை மலர வைக்க வழிகாட்டிய என் இனிய வன்னி மைந்தன் வவுனியா திலீபன் ஆகியோர் என்றும் என் நன்றிக்குரியவர்கள்.

அழகிய பூந்தோட்டத்தில் விடியலைத்தேடி நிற்கும் இந்தப் பூபாளத்துப் பூக்கள் உங்கள் விமர்சனங்களை ஏற்பதில் மகிழ்ந்து நிற்கிறது. உங்கள் விமர்சனங்கள் இந்த இலக்கியத் தோட்டத்தில் புதிய மலர்களை மலர வைக்கும் !

அன்புடன்
**மானிலா**

"கோகுலம்"
1ம் ஒழுங்கை
குட்செட் வீதி,
வவுனியா.
01.01.2001

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**தமிழ்மணி கவிஞர் அகளங்கன்**

தமிழ் எழுத்தாளர்களில் பெண்களின் தொகை குறைவு. பெண்களின் உணர்வுகளை, பிரச்சினைகளை புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்ற வாசகர்களின் தொகைக்கு தீனி போடும் அளவுக்கு பெண் எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழில் இல்லை. உள்ளது யானைப்பசிக்கு சோளப்பொரி என்றளவில் தான் கொள்ளப்படத்தக்கது.

சில ஆண்கள் பெண் புனைபெயர் கொண்டு நவீனங்களைப் படைக்கும் நிலை இதனால் ஏற்பட்டது. புனைகதை இலக்கியத் துறையிலாவது புகழ் பெற்ற சில பெண் எழுத்தாளர்களைச் சுட்டிக் காட்டமுடியும்.

லக்ஷ்மி, சிவசங்கரி, ராஜம் கிருஷ்ணன்,போன்றவர்களைப் புனைகதைத் துறையில், சாதனை படைத்தவர்கள் வரிசையில் குறிப்பிட முடியும். ஈழத்திலும் தாமரைச் செல்வி, கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா போன்றவர்கள் நினைவுக்கு முந்துகிறார்கள்.

ஆனால் கவிதை இலக்கியத் துறையிலோ பெண்கள் சாதித்தது மிகக் குறைவு என்று சொல்லலாம். தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த காரைக்காலம்மையாரையும், கண்ணன் மேல் காதல் கொண்டு உருகிப் பாடிய ஆண்டாளையும் அறக் கருத்துக்களை அள்ளி வீசிய ஔவையாரையும் கண்ட தமிழ் இலக்கிய உலகு அத்தகையோரைப் பின்னால் காணவில்லை





சங்ககாலத்துப் புலவர் வரிசையில் மிகச் சிறந்த பெண் புலவர்கள் பலரைக் கண்டு பெருமிதம் அடைந்த தமிழ் இலக்கிய உலகு பாரதிக்குப் பின்னும் கூட பெரும் பெண் புலவர்களைக் காணாதது பெரும் அதிசயமே. பாரதியின் புதுமைப் பெண், கவிதை படைக்க லாயக்கற்றவர்களா! என்ற கேள்வி எழாமல் இல்லை.

இலக்கிய வேதனை மிகுந்த இந்த நேரத்தில் மானிலாவின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு வெளிவருவது மனதிற்கு இதம் தருகிறது. 1993ல் காலக்குயில் கவிதை நூலில் கூவிய இக்குயில் ஏழு ஆண்டுகள் கழித்து மீண்டும் கூவுகின்றது. காலக்குயில் என்பதால் தான் இத்தாமதமோ!

ஓசை ஒழுங்குகள் கருத்துக்களை சிறைப்படுத்தக் கூடிய சொற்களைக் கோவைப்படுத்தி கவிதை ஆக்கும் கலை மானிலாவுக்கு கைவந்த கலையாகவே தெரிகிறது.

இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இசைப் பாடல்களில் மட்டுமன்றி ஏனைய கவிதைகளிலும் ஒரு இயைபு காணப்படுவதை இரசிக்கலாம். எளிமையான சொற்கள் மூலம் தன்னுணர்வுகளை அழகாக, ஆழமாக வெளிப்படுத்துகிறார்.

படிமங்கள், குறியீடுகள் என்ற புதுக்கவிதை இலட்சணங்கள் படிப்போருக்கு பொருள் மயக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படுகின்ற இக்காலப் புதுக்கவிதைகளில் இருந்து இவரது கவிதைகள் சற்று மாறுபட்டே ஒலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை உயர்ந்த கவிஞனாகக் காட்டிக் கொள்வதாக சிலர் வலிந்து பயன்படுத்தும் படிமக் குறியீட்டு உத்திகள் கவிதையின் கருப்பொருளை இருண்மை அடையச் செய்வதோடு கவிஞனின் உணர்வையும் தின்றுவிடுகின்றன. கவிதையின் சொற்கள் மகாத்மா காந்தியைப் போல் எளிமையாக இருக்க வேண்டும். அவை குறிக்கும் பொருள்களோ எலிசபெத் மகாராணியைப் போல் ஆடம்பரமாக இருக்க வேண்டும். என்பான் வைரமுத்து.

இவரது கவிதைகளும் எளிய சொற்களினாலே ஆக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது. சொற்கள் ஒவ்வொன்றும் உயிர் பெற்று உலாவும் அளவு உணர்வு பெற்றவையாக விளங்குகின்றன. சமகாலப் போர்ச்சூழலும் அதன் விளைவுகளான அவலங்கள், பிரிவுகள், அழிவுகள், அழுத்தங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் மட்டுமல்ல பெருமூச்சுக்களும் கவிபாடக் களமமைத்துக் கொடுக்கின்றன.

மானிலாவின் கவிதைகளிலும் இவற்றையே காணக்கூடியதாக இருக்கின்றது. இவரது சில கவிதைகளை உதாரணத்துக்குத் தருகின்றேன். புது வாழ்வைத் தேடி என்ற கவிதையில் புத்தபகவானிடம் இவர் செய்யும் வேண்டுதல் இப்படி அமைகின்றது.

தருமத்தின் காவலனே
உன் காலடியை
தரிசிக்கும் வேகம்
இதயத்தில் புதிய தாகம்
உல்லாசப் பயணியாய்
உன்னிடம் கேட்கவில்லை
உன் பிள்ளையாய் கேட்கிறேன்
...............





“விடியல்கள் உன்வசம்” என்னும் கவிதையில் வரும் உற்சாகம் ஊட்டும் வரிகள்

வானில்
கார் மேகங்கள் சூழ
போர்க் கோலமாய் வந்த
இராட்சதப் பறவைகளை
நினைத்து விட்டாயா....?
கலங்காதே - உன்
கண்ணெதிரே - இன்று
பறந்து கொண்டிருப்பது
வெள்ளைப் புறா என
எண்ணிவிடு !

இதேபோல் பெண்மையைப் பற்றிச் சொல்லும் “தீ” என்னும் கவிதையில்

பெண்ணே - நீ
புதிய வார்ப்புக்களின்
பூபாளமாய்
பூமியில் பூத்திருப்பவள்
உன் எழுச்சிகள்
ஒவ்வொன்றும்
ஓங்கி ஒலிக்கட்டும்

என்று முரசு கொட்டுகிறார்.

விடியலைத் தேடி என்ற கவிதையில்,

தண்டவாளத்தோடு
தர்க்கம் புரியும் புகையிரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு
தடை போட்டது.

எனவரும் வரிகளும்

"மனிதம் எங்கே" என்ற கவிதையில்

உன் மன வீணை
தடுமாறும்
நிலைமாற வேண்டும்
புயல்கூட உனக்காக
தணிந்தாக வேண்டும்
மானிடனே
உறவுகளைத் தொலைத்து
உடமைகளை இழந்து -நீ
எதைத்தான் தேடுகிறாய்
ஓ......
மனிதம் தொலைந்து விட்டதாக
தேடுகின்றாயா...?

இப்படிப் பல இடங்களைச்
சுட்டிக்காட்டலாம்.

கவிதை எழுதுவது மானிலாவுக்குப் பிறந்த வீட்டுச் சீதனமும், முதுசமும் மட்டுமல்ல., புகுந்தவீட்டுப் புதுப்பரிசும் கூட, இவரது கணவன் நாடறிந்த கவிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. "எனது இராகங்கள்"

கவிதைத் தொகுப்பின் மூலம் புகழ் பெற்ற வவுனியா திலீபனை யாவரும் அறிவர். தனித்தனிக் கவிதைத் தொகுப்புக்களைத் தந்த இவர்கள் இனி இணைந்தும் தருவார்கள் என எதிர்பார்க்கலாம்.





கவிதையைப் படிக்கும் உங்களுக்கு இடையில் தடையாக நான் நில்லாமல், இக்கவிஞர் சிறந்த கவிஞராக வளர வாழ்த்துக்களைக் கூறி இந்நூல் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கையில் விடை பெறுகிறேன்.

**நன்றி வணக்கம்**

பம்பைமடு
வவுனியா

அன்புடன்
**அகளங்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

கனகரத்தினம் அவர்களுக்கு,
ஒரு மழைத்துளியாக
என்னுள் விழுந்தீர்கள்
நதியாய்........
அதில் கரை புரண்ட வெள்ளமாய்
பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்.......
நீங்கள் ஓயக் கூடாது
என்றும் ஓடவேண்டும்
ஒரு விதையாக
என்னுள் விழுந்தீர்கள்
முளைவிட்டு மரமாகி
விருட்ஷமாகி விட்டீர்கள்

நீங்கள் பட்டுப் போகக்கூடாது
பட்ட மரமாகக் கூடாது
வேர் மட்டுமல்ல;
விழுதிறக்கிக் கொண்டும்
இருக்க வேண்டும் !
என் அன்பு மனைவி சார்பாக
இந்நூலை
சமர்ப்பணம் செய்கிறேன் நான்.
உங்களுக்கு சமர்ப்பணம் செய்வதினால்
இந்நூல் - ஒரு
பெறுமதி
பெற்றுமென நம்புகிறேன்



**உங்கள் வவுனியா திலீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளே.......

| | | |
|---|---|---|
| 01. | தொடரும் ஓர் காத்திருப்பு | 01 |
| 02. | புது வாழ்வைத் தேடி........... | 02 |
| 03. | மௌனம் | 04 |
| 04. | இதயத்தைத் தேடி......... | 05 |
| 05. | என் சுவாசமே.......... | 06 |
| 06. | எப்போதும் இப்படித்தான் | 07 |
| 07. | விடியல்கள் உன் வசம்........ | 08 |
| 08. | தீ... | 09 |
| 09. | புதியதோர் காலை கண்டேன்.......... | 10 |
| 10. | விடியலைத் தேடி | 13 |
| 11. | அழகிய காரணம் ஒன்று......... | 15 |
| 12. | மனிதம் எங்கே? | 16 |
| 13. | மோகனத்தில் ஓர் முத்தம் | 17 |
| 14. | ஓ.......மானிடனே........ | 19 |
| 15. | எனை ஆளும் அருள்ஜோதி | 21 |
| 16. | அன்பு | 22 |
| 17. | மழை | 23 |
| 18. | காதல் | 24 |
| 19. | என் இனிய கிராமமே | 24 |
| 20. | ஓர் பேனாவின் சங்கீதம் | 26 |
| 21. | புதிய பாதை | 28 |
| 22. | ஓ.........சமுதாயமே | 28 |
| 23. | எழுந்து வரமாட்டாயா? | 29 |
| 24. | தொலைவினிலே....... | 31 |
| 25. | புதுக் கவிதை | 31 |
| 26. | புது வரவொன்று | 33 |
| 27. | இரகஸ்ய அறிமுகம் | 34 |
| 28. | மௌன ஸ்வரங்கள் | 35 |
| 29. | பூபாளத்துப் பூக்கள் | 38 |

# தொடரும் ஓர் காத்திருப்பு

என்னுள்
சலசலக்கும்
நினைவு நீரோடைகள்
உன்னுடையவை தான்
நீ மட்டும்
இன்னும் நீராடாமல்............
விண் மீன்கள்
தொலைந்து விடவில்லை
இது
பகல்ப் பொழுதென்பதை
நினைவு படுத்தி வீடு
அலைகள் அடங்குமென – நீ
அங்கலாய்க்கிறாய் – உன்
நினைவலைகள் மட்டும்..............!
இது வசந்த காலம்
நீ சகாராவை அல்லவா
சிந்தித்த வண்ணம்......!
நீதி தானோ.......!
காலங்கள் என்பவை
கடந்து செல்பவை
நீ மட்டும் – இன்னும்
காத்திருப்பது ,.....!
ராகங்களை – நீ
ரசிக்கிறாய்
அவையும்
லயத்துடன் இணைந்து தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயோ
கவிவரைந்த முகிலினத்துக்காய்
காத்திருக்கிறாய்.......
கலையாத கனவுகளுக்குள்
காவியத்தைத் தொலைத்து விட்டாயா?
தொடரும் உன் காத்திருப்பால்
நீ
நிதர்சனப்படுத்த இருப்பது
எது வென்று சொல்வாயா?

## புது வாழ்வைத் தேடி

அழகிய தடாகத்தின் நடுவினில்
அன்புருவமாய் அமர்ந்திருந்து
நீ சொல்லும் சேதி என்ன......
என் மனத்திரையினில்
போதி மரங்கள் அசைந்தாடிய வண்ணம்.......
தலை நிமிர்த்தி – உனை
தரிசிக்கையில்
தூரத்தே உனை நாடி
ஓடி வரும்
வெள்ளைப் புறாக்கள்
என் மனதை
கொள்ளையடித்தன





தர்மத்தின் காவலனே !
உன் காலடியை
தரிசிக்கும் வேகம்,
இதயத்தில் புதிய தாகம்
உல்லாசப் பயணியாய்
உன்னிடம் கேட்கவில்லை
உன் பிள்ளையாய்
கேட்கிறேன்.......
என் கற்பனைகள்
தொலைகையில்
தடாகத்தின் தாமரைகள்
செந்நிறமாய் அல்லவா
மிளிர்கின்றன..... !
அழுகுரல்களும்
அகதி முகாம்களும்
அவலங்களும் – என்னை
நிலை தளர்த்துவனவாய்
நிர்ப்பந்திக்கின்றன
வெள்ளை உடைகளுடன்
வெள்ளை மலர்களுடன்
நிரை நிரையாய்
உனை வேண்டி நிற்கும்
இளம் கிள்ளைகள் இங்கே......
தாய் மடி மறந்து – தன்
தந்தையை இழந்து
வானத்துப் பட்ஷிகளுக்குப் பயந்து
வாகை மர நிழலில் பதுங்கும்
இளம் கிள்ளைகள் அங்கே...... !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் தாங்கவில்லை.......
இரு விழிகள் தூங்கவில்லை......
என்ன வென்று சொல்ல
எப்படித் தான் எழுத !
பறந்து வந்த
புறாக்கள் – வந்தசேதி
மறந்து தவிப்பது மட்டும்
எனக்குப் புலப்படுகிறது
புத்தனே – நீ
சித்தம் கொள் !
சிதைந்து போன
தொலைந்து போன
உடமைகள்
உயிர்கள்
பழங்கதையாகட்டும் !
புனிதனே !
புலரும் பொழுதில்
பூத்து நிற்கும் மலர்களுக்கு
புது வாழ்வளிக்க
நீ சித்தம்கொள் !

## மௌனம்

உலகத்தில் –மிக
உயர்ந்து நிற்கும்
உன்னத பாஷை !





## இதயத்தைத் தேடி.....

என்
காதல் வானமே
கார் காலத்துக்கு
வீடுமுறை கொடுத்து வீடு !

தாங்காது – பூமி
தாங்காது
உனது கவிதை இது
ஒரு முறை
படித்து முடித்து விடு....... !

உயிரே......
என்
இதயத்தின் இளைய பூவே......
நீயில்லாத வாழ்வில்
நேசம் என்பது இல்லையடி
உன்
நினைவில்லாது போனால்
சுவாசம் என்பதும் இல்லையடி
உறவைத் தேடி வா......
உயிரே ஓடி வா – என்
கனவே காணவா – புது
கவிதை பாடி வா
தனிமையில் தவித்து
தனி வழி நடக்கையில்
என் பாதைகள்
முட்களை அல்லவா
முத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நேசத்தின் விலாசம்
உனக்கு மட்டுமே தெரியும்.......
உயிரே
எழுந்து வா
உலகை அளக்கலாம்

பூமியில் வாழும்
காலங்கள் யாவும்
பூவே – என்னோடு
நீ வேண்டும்
உனை மறந்திடத் தெரியா
இதயம் இது
இங்கு வாழ்ந்திட
இனியோர் வழியும் எது ?
உயிரே ஓடிவா
உறவை தேடிவா..... !

## என் சுவாசமே.........

என் சுவாசமே
நீ
தோற்றுவிட்டாய் என்பதை
நான்
ஏற்றுவிடப் போவதில்லை ;
ஏற்கனவே
என் இதயத்தை வென்றவன்
நீ தானே......... நீ தானே........ !





## எப்போதும் இப்படித்தான்.......

நண்பா
ஓடும் ரயிலின்
இருக்கைகள்
இப்போதும் அதே பக்கமே
எங்கள் பயணப் பாதைகள் தான்
இப்போது மறுபக்கம்
அடம் பிடிக்காதே.......
நீ பின்னோக்கியே
சென்றாக வேண்டும்......
உன் பதிவிலக்க இருக்கை
இதுவே தான்
இரும்பினை நம்பிய
இனிய பயணம்
இரு கோடுகள் தொடுக்கும்
புதிய பயணம்
நீ மட்டும் அடம்பிடிக்காதே
உன் பயணம் மட்டும்
உன் ஊரில் முடியும் – எனை
சந்திக்காது போனால் – நீ
சஞ்சலம் கொள்ளாதே
என்
பதிவிலக்க இருக்கையோ.......
தொலை தூரப் பெட்டியில்....... !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியல்கள் உன் வசம்

சின்னஞ் சிறியவனே – உன்
சிந்தனையில் என்னவோ.....
வெள்ளைச் சீருடையில் – நீ
வேதனை கொள்ளும்
காரணம் சொல்வாயா ?
ஓ........
அந்த ஞாபகங்கள்......
நெருஞ்சி முட்களாய் – உன்
நெஞ்சினை
நெருடுகின்றனவா........ !
வானில்
கார் மேகங்கள் சூழ
போர்க் கோலமாய் வந்த
இராட்சதப் பறவைகளை
நினைத்து விட்டாயா...... ?
கலங்காதே – உன்
கண்ணெதிரே – இன்று
பறந்து கொண்டிருப்பது
வெள்ளைப் புறா என
எண்ணிவிடு
உன்
வாழ்க்கையின்
இனிய அத்தியாயங்கள்
இனிமேல்த் தான் ஆரம்பம்
புலரும் விடியல்களை
புதிதாக்கு !





புதியதொரு உலகை
உருவாக்கு
வழிந்தோடும்
விழிநீரைத் துடைத்திடு – புது
வழிதேடி
நீயும் விரைந்திடு
பூமியின்
புதிய சூரியனே – இனி
விடியல்கள் உன் வசம் !

## தீ........!

பெண்ணே
தலைவன் பெயர் சொல்லாது
நீ –
தடுமாறியது சங்க காலமடி
தலைமை வகித்து
தரணியை நீ ஆள்வது
இந்தக் காலமடி
நீ
வார்த்தைகளின்
வர்ணிப்புக்களுக்காக
சிருஷ்டிக்கப்பட்டவள் அல்ல
இராமனின் சீதையாய் தீக்குளிக்க
இன்றைய சீதைகள்
சிறகிழந்த சிட்டுக்கள் அல்ல.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே – நீ
புதிய வார்ப்புகளின்
பூபாளமாய்
பூமியில் பூத்திருப்பவள்
உன் எழுச்சிகள்
ஒவ்வொன்றும்
ஓங்கி ஒலிக்கட்டும் !
சீதனச் சந்தையில் – உனை
சிறைப்பிடிக்க – நீ
விலைமகள் அல்லவே
அலை மகள் அல்லவா........
உன்
அலைக்கரங்களால்
மா(ப்) பிள்ளைகளின்
முகவரிதனை அழித்திடு !
இன்று
இலக்கியத்தை
விலை பேசுபவர் மத்தியில்
நீ
கவிதையாக – பாடலாக
விலை போகிறாய்
பெண்ணே !
இந்நிலை மாற வேண்டும்.......
பார்த்தாயா.......
உன்னை வைத்து
உழைக்கும்
இலக்கியக் காரர்களை........
கற்பனையில் மட்டும் அல்ல





**காசுக்காக கவிபாடும்**
**காலம் இது ;**
**நீ**
**சமுதாய சாக்கடையை கண்டு**
**சஞ்சலம் கொள்ளாதே – இங்கே**
**சந்தன வாடையை**
**மலர வைப்பதாய்**
**சத்தியப் பிரமாணம் எடு.!**
**அடக்கு முறைக் காட்டிடை**
**அக்கினிக் குஞ்சொன்றை**
**வைத்திடு – இனி**
**உன் முகவரி கேட்டால்**
**தயங்காதே...... !**
**தீ என்று**
**சொல்லிவிடு. !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியதோர் காலை கண்டேன்.......

புதியதோர் காலை கண்டேன் – அதில்
புயலென தென்றலும் மாறக் கண்டேன்
எத்தனை சோதனையோ......;
எனை பாரினில் வாழ்ந்திட ஏன் படைத்தாய் ?

சோகங்கள் தீராயோ........
இந்தப் புவியினில் மாற்றங்கள் நிகழ்வதற்கே
கண்களும் திறவாயோ.......
நித்தம் மடிந்திடும் உயிர்களை காத்திடவே........

வானத்தின் நிலவினைப் போல்
மனம் விரும்பியபடி செல்லும் மனம் கேட்டேன்
கொடுமைகள் கோடி கண்டேன் – நித்தம்
உன்னடி தேடும் நல் மனம் கொண்டேன்

சுவாசமே நின்றிடினும் என் நினைவுகள்
உன்வசம் நிலைக்கக் கண்டேன்
அவனியில் ஜோதி கண்டேன் – அதில்
அருள் நதி உன் எழில் தானுள்ளதோ......

**பாடலுக்காக மாற்றப்பட்ட**
**பாரதியார் கவிதையின்**
**மறு வடிவமொன்று ;**





## விடியலைத் தேடி......

கண்ணீரில்
நனைகிறது நல்லிரவொன்று
இணையமுடியாத
இரும்புகளில்
ஓடிக்கொண்டிருக்கும் புகையிரதம்
சொல்ல முடியாத
சோகங்களை
சுமந்து செல்லும் என் இதயம்
சுமையோடு போகும்
புகையிரதம்
இசை வடிவில்
இணைந்து கொண்டது

என் கவிதைக்கு
எதுகை மோனை சொல்ல......
இமைக் கதவுகள்
விழியினை மூட மறுத்தன
இதய வானில் – பெரும்
இடி முழக்கங்கள்....... !
மேகங்கள் நீர் சிந்த
என் பார்வைகள்
வயல் வெளிகளை
வெறிக்கின்றன ;
நிலா மகள்
நிசியினைக் கலைத்துக் கொண்டிருந்தாள்
பனித்துளிகள்
போர்த்திப் படுத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் புல்வெளிகள்
சிரிப்பைச் சிந்திய வண்ணமாய்
ஆவலோடு நோக்கி
நேசக்கரம் நீட்டின
சலசலக்கும் நீரோடையும்
என் சோகத்துக்கு
சங்கீதம் பாடியது
ஜன்னலினூடே
என்னைத் தழுவிய தென்றல்
என் கண்ணீரை
துடைத்துச் சென்றது
விசாலமான விருட்ஷங்கள் —என்
விலாசத்தை விசாரித்தன
இயற்கையின் பசுமையில்
இனிய கவிதை படைத்தது
என் இதயம் !
பச்சைப் புல்வெளியில்
பள்ளி கொள்ளத் துடித்தது
மனம் ;
தண்டவாளத்தோடு
தர்க்கம் புரியும் புகையிரதம்
சிந்தனைக்கு
தடை போட்டது ;
எங்கும் இடிமுழக்கங்கள்
என் கையில்
ஈரம் சுட்டது





அட ;
என்
இளைய பூ
கண்ணீரில் நனைந்து கிடந்தது ;
இரவைக் கலைக்கும்
என் பார்வைகள்
மீண்டும் புல்வெளியில்........
என்னைப் பார்த்து
யாவும் கையசைத்தன....... !
சுமையோடு
செல்லும் புகையிரதம்
வேகமாய் விரைந்தது
விடியலைத் தேடி !

## அழகிய காரணம் ஒன்று !

நீ
அர்ச்சனை செய்து
அனுப்பிய விபூதியை — நான்
அணிவதே — இல்லையடி !
காரணம் — அது
முடிந்துவிடும் என்ற
முன்னெச்சரிக்கை தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மனிதம்" எங்கே ?

சோகங்கள்
தாங்கி வரும்
மேகங்கள் தரும்
சேதி தான் என்ன ?
மானிடனே
உன்
மௌனத்தின்
முடிவு தான் என்ன ?
விடியலுக்காய் காத்திருந்து
வெள்ளிகளை எண்ணுவதில்
வெற்றி சாத்தியமோ........ ! ?
உன் மனவீணை
தடுமாறும்
நிலை மாற வேண்டும்,
புயல் கூட உனக்காக
தணிந்தாக வேண்டும்
மானிடனே
உறவுகளைத் தொலைத்து
உடமைகளை இழந்து – நீ
எதைத் தான் தேடுகிறாய் ?
ஓ.........
'மனிதம்' தொலைந்து விட்டதாக
தேடுகின்றாயா ?
அதோ
கிழக்குப் பறவையொன்று
கீழ் வானில் பறக்கிறது
வெண்புறாவே தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ
விடியலின் போது
விசாரித்துப் பார்
"மனிதம்" எங்கே? என்று !

## மோகனத்தில் ஓர் முத்தம் !

மலைச் சாரலில் மரங்கள் யாவும்
மனம் விட்டுச் சிரித்திட
பூங்குயில்கள் இணைந்து
புது ராகம் இசைத்திட
பறவைகள் – அழகிய
சிறகை விரித்து
வானத்தை வாழ்த்திட
தென்றல் வந்திங்கே
தெம்மாங்கு பாடிட,
விரிந்திருக்கும் மொட்டுக்கள
விடியலுக்கு நன்றி சொல்ல
அருவியின் –
ஆனந்த கங்கை – என்
உள்ளத்தை அள்ளி
உணர்வுகளைக் கிள்ளி விழ ;
ஆனந்தக் கடலின்
அற்புத அலைகளாய் – நான்
ஆனந்தத் தெப்பத்தில்
ஆழியில் மிதக்கிறேன்......

என் – இளைய
மனம் – மலரும்
காலையின் பசுமையை
கண்டு களித்திட
காலை மலர்ந்தது
காலையின்
மகிமையில்
மனித மனங்களை
வாசிக்கிறேன் ;
அனுதினம்
அங்குலமாய் யாசிக்கிறேன்
இதயமெங்கும்
புதிய தாகம்
இதழ்களெங்கும் – இனிய
இசையின் ஈரம்
போகும் மேகமதுவும்
என்மீது
பூக்கள் தூவும்
புலரும் பொழுதில் – நான்
புதுமயக்கம் கொண்டேன்
புவியினில் துன்பங்கள்
தொலையக் கண்டேன்
இன்பங்கள் கோடி
இணையக் கண்டேன்
துள்ளும் மானினமும்
துடித்தெழும் மீனினமும்
புதிய துடிப்பினை
பரிசளித்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாரியை
முற்றாக மறந்து விட்டு
காலையின் – இளைய
கரங்களை – நான்
மோகனம் பாடி
முத்தமிட்டேன் !

## ஓ...... மானிடனே.......

ஓ.... மானிடனே
மரித்து விட்ட – உன்
மனச்சாட்சிக்கு
மறுவாழ்வு கொடு !
சமுதாயம் எங்கே ?
நீயும் நானும் தானே
அன்றைய யேசு
சிலுவை சுமந்தார்
நேசிக்கும் மானிடர்க்காய்
கண்டறிந்த வகையில் – இது
கணனியுகம் என்பது
உண்மை தான்
மானிடா !
உன் இதயத்தின்
உணர்வுகளை செப்பனிட – இது
உதவாது என்பதை
உணர்ந்துவிடு !

உனக்கென – புதிய
உலகம் செய்து – நீ
உல்லாசமாய் வாழ்ந்து கொண்டு
உபதேசம் செய்யாதே
எங்கே உன் மனச்சாட்சி....... !
தயவு செய்து – சற்றே
தளர்த்திவிட்டு தாழ்ப்பாளை......
உன் உணர்வுகள்
ஊனமாவதை உணர்ந்துவிடு !
உண்மைகளை உள்நிறுத்தி
பொய்மைக்கு – நீ
பொன்னாடை போர்த்தாதே
கௌரவப்பூக்களை
களங்கப்படுத்தாதே !
உறவுகள் என்பவை
உன்னால் உருவாக்கப்பட்டவை
காற்று நின்றால் – உன்
கட்டுடல் சரிந்துவிடும்
வீணே புலம்பாதே
வேடிக்கை பார்க்காதே
வேலிகள் போடாதே
வேஷங்கள் ஆடாதே
வெளிச்சத்தில் வா – நாம்
சமுதாயத்தை சந்திப்போம் !





## எனை ஆளும் அருள் ஜோதி நீயே.......

எனை ஆளும் அருள் ஜோதி நீயே
என் வாழ்வின் பொருள் கூறுவாயே
வெண்ணிலா
விண்ணை தாண்டக் கூடுமோ.....
என்னுயிர் உன்னை
நீங்கி வாழுமோ.......
விண்ணோடு மேகங்கள்
மண்ணோடு தாகங்கள்
கண்ணோடு கார் காலங்கள்
எனை ஆளும்

இரவும் பகலும்
உருகும் உணர்வுகள்
உந்தன் உள்ளம் அறியாதோ........
எந்தன் சதங்கைகள்
உந்தன் பாதையில்
புலம்பும் ஓசைகள் கேட்காதோ.....
என் விழியில் அருவிகள்
பாய்ந்திட இங்கே
வழி தெரியாமல்
தவிக்கிறேன்
எனை ஆளும்

நெஞ்சினில் நினைவுகள்
தீயாய் எரிகையில்
நீரினை வார்க்க வாராயோ.......
வேரினை இழந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிதனை நீயும்
வேடிக்கை பார்ப்பது
முறை தானோ.......
உந்தன் சந்நிதி
ஒன்றே நிம்மதி
என்றே என் மனம்
கவி பாடும்....... !

எனை ஆளும்

## அன்பு

உண்மை குடியிருக்கும்
உள்ளத்தில்
தெய்வீகம் தவளும்
தெளிந்த நெஞ்சத்தில்

இயற்கையை இரசிக்கும்
இனிய இதயத்தில்
தன்னையே தரைவார்க்கும்
தாயின் சுவாசத்தில்
நடமாடும் நூலகமாய்
நாளும் நிலைத்திருக்கும் !





## மழை

மாரியாய் பொழிந்த
மழை – என்
குடிலைக்
கொள்ளையடித்துவிட்டது
இப்போது
தெறித்துக் கொண்டிருக்கும்
ஒவ்வொரு மழைத்துளியும்
புதிய சந்தம் சொன்னது !
மழையின் வேகமும்
மனதின் தாகமும் – உன்
நினைவின் பாரமும் – புது
இசையின் சாரமும் – என்
நெஞ்சினைக் கொள்ளையடித்ததில்
மண் குடிலை
மறந்து விட்டது
என்மனம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

இலக்கிய உலகத்தில்
இனிமையானது
இசை உலகத்தின்
வசமானது
கலை உலகத்தினில்
காவியமானது
உணர்ந்தவர் வாழ்வில்
உன்னதமானது
இருபதின்
கம்பயூட்டர் யுகத்தினில்
மலிவானது !

## இனிய என் கிராமமே

இனிய –
என் கிராமமே
நான்
பாடித்திரிந்த
புல்வெளிகள்
பச்சை மரங்கள்
நிரை நிரையாய்
நெல் மணிகள்
நெஞ்சினை மிஞ்சிய
ஞாபகங்கள்........





என் ஜன்னல் கடந்து
கம்பியினூடே
தொட்டுவிட்டுச் சென்ற
தென்றல்
காதுகளில் ஏதோ சொன்னது......

பனித்துளிகளை
சுமந்து நிற்கும்
பச்சை மரங்களெல்லாம்
இச்சை கொண்டு –என்
இதயத்துடன்
இணைந்து இன்னிசை பாடும்......
காவியங்கள் விதைத்து
அறுவடை செய்த
வன்னி மண்ணில்
மரங்கள் வனங்கள்
மலைகள் யாவும்
கவி சொல்லும்.........

இனிய என் கிராமமே

என் – இனிய
வன்னித் தேவதை
வான் மேகங்களை
வர்ணிப்பதற்காய்
வார்த்தைகள் தேடி
வன்னி மண்ணில்
எங்கோ
என் எண்ணங்களை
தொலைத்து விட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகம் கொண்ட
இதயம் அதை
சுகப்படுத்த என் தேசத்தின்
சூரியன் எங்கே ?
தேடுகின்றேன்........ !

இனிய என் கிராமமே

## ஓர் பேனாவின் சங்கீதம்

அழகிய பொழுது
ஆலம் விழுதாய் –உன்
அற்புதமான
இனிய மனசு !
சந்தோஷ வானில்
சங்கீத மேகங்கள்
எப்போதும் சுகம் தரும்
பாலை வனத்திடை
பயணிக்கும் வேளையில்
நயாகராவை
ஞாபகப்படுத்தியது – உன்
இசையெனும்
இனிய ஜீவன்
மனமே !
மயங்கி நிற்கும்
மானிட ஜாதியிடை
நீயோர் ஜாதிமுல்லை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்கள் காணவில்லை
உன்போல் யாருமில்லை
பொய்கள் கூறவில்லை
புலவன் நானுமில்லை
இசையெனும் ஜீவநதியின்
இளைய ஊற்றே...... !
உன் பிரவாகம் –புதிய
பிரளயங்களை
உடைத்தெறியும் – என
உறுதி சொல்கிறேன் !
சத்திய வேட்கையோடு
உன்
இதயம் சங்கமிக்க
உன்
சங்கீதம் வழி சொல்லும் !
பொன் மேகங்கள் யாவும்
உன்
வழியெங்கும் பூத்தூவும் !
இளைப்பாறா –என்
இதயத்தின் இனிய பேனா
இனிய இசையில் உனக்காக
கவி பாடும்....... !

## புதிய பாதை

வானம் பூமி மரங்கள் கொடிகள்
பூக்கள் – நட்ஷத்திரங்கள்
மேகங்கள் – நிலவு
சூரியன் – பறவைகள் யாவும்
எமது வசம்
நான் உன் வசம் !
நீ என் வசம் !
பூவே வா
உலகத்திற்குப்
புதிய பாதை அமைப்போம் !
ஐந்தாவது வேதமாய்
நம் காதலை
சொல்வோம்
எமது ஆனந்தக் கண்ணீர்
இந்தப் பூமியைப்
புனிதப்படுத்தட்டும் !

## ஓ...... சமுதாயமே.......

ஓ...... சமுதாயமே – நீ
சாதிக்க நினைப்பது என்னவோ
சாதிகள் பல படைத்தாய்
சண்டைகள் நீ தொடுப்பாய்
முட்களால் பாதை செய்து





வரவேற்புக்காய் – நீ
வாசலிலே – மலர்
மாலையோடு காத்திருக்கும்
மாயம் என்ன மாயம் !
மானிடனே – உன்
மனித நேயம் எங்கே ?
வீழுந்து கிடப்பவனை
எழுந்து நடக்க வழிவீடு !
வேதனைப் படுத்தாதே – நீ
வேடிக்கை பார்க்காதே.......
உன்
வேஷங்கள் கலையும் !
வீடிந்திருக்கும் உலகத்தை
வீழிதிறந்து பார் –அங்கே
வழிந்தோடும் துயரத்தை
வீரட்டி
புது ஒளிதன்னை ஊருவாக்கு
உன் உள்ளத்தில் !

## எழுந்து வர மாட்டாயா ?

முட்களை எல்லாம்
முறித்துச் சென்றவன்
ஒரு
பூவினால் – இன்று
காயப்பட்டுக் கிடக்கிறான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் காலடி வைக்க
நினைத்தவன் – ஒரு
புனித கங்கையில்
மூழ்கிப் போனான்

ஏய் !
என் சங்கீதத்தைக் கேள்
அதில் –ஒரு
சரித்திரமே
சங்கமமாகியிருப்பதை
உணர்ந்துகொள்
என் இதயத்தின்
ஆழத்தில்
வாழ்ந்து கொண்டிருப்பவளே
எழுந்து வர மாட்டாயா ?
உன் –கூந்தலில்
சூட்டுவதற்கு
நான் பூக்கள் சேகரித்து
வைத்திருக்கிறேன் –என்
வைகறை நிலவே
நீ மெல்ல வா –என்
மெல்லிய மேகமே –நீ
தென்றலில் மிதந்து வா !
என் இதயத்தில்
வரைந்து வைத்திருக்கும்
கவிதையை
வந்து வாசித்துப் பாரடி !





## தொலைவினிலே......

அன்பே
வாழ்வின் அர்த்தத்தை
தேடிச் சென்ற வழியில்
என்
இதயத்தை அல்லவா
தொலைத்து விட்டேன்,
தொலைந்த இடம்
கண்டு கொண்டேன்
தொலைவினிலே உன்னிடமே
உயிரே –நான்
உன் வசமே !

## புதுக்கவிதை

அன்பே,
உன்
நினைவுகள் நர்த்தனம் புரிவதால்
நிலை தடுமாறி
நிற்கின்றேன் நாணலாய்
தொலைதூர நிலவாய்
நான் – நாளும்
தொலைகிறேன் ;
உறவே – நீ
பனிப்போர் தொடுக்காதே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதிர்ந்து போனேன்.
என் அன்பே ஆடாதே....... !
இன்று
காற்றுக்கூட என் இருதயத்தை
காயப்படுத்தக்கூடும் – என்
காத்திருப்பெல்லாம்
கண்ணே உனக்காக......
கலையாத கனவுகள் நனவாக
கரையோடு உறவாடும் அலையாக
நாளும் நடக்கிறேன் – நம்
நட்பின் நினைவோடு –
என் அன்பின் முகவரியே ;
நிரந்தரமான
உன் இருப்பிடம்
என் வாழ்வின்
நிரந்தரம் !....

உயிரே
உயிரின் உறவே
உறக்கத்தை மறந்த
என் விழிகள்
உனைத்தேடி விழித்திருக்கும் !
இந்தப் பிரபஞ்சமே
இல்லாத நிலையிலும்
நிலவென்றும் வானுக்கே....
ஏய்,
மேகங்கள்
மழையானதால்





அந்தவானம்
ஒருபோதும் உலர்ந்ததில்லை
புனிதத்தை
புரியாதவர் போகட்டும்
புலரும் பொழுதில்
விரைந்தோடி வா
புதுக்கவிதை படைப்போம் !

## புதுவரவொன்று......

நீயோ......
பட்டுக் கம்பளமிட்டு
வசந்த காலத்தை
வழி மறித்து வைத்து
வைகறை மலர்களை
பறித்து வைத்து
புது வரவை
எதிர் பார்த்த வண்ணமாய்....... ;
பட்டுக்கம்பளத்தை அடைவதற்காய்
என் பாதங்கள்
கத்திமீதல்லவா பயணிக்கின்றன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகஸ்ய அறிமுகம்

வண்ண மேகங்கள் சூழ்ந்து
வானில்க் கோலம் போட
நட்ஷத்திரங்கள் யாவும்
வாழ்த்துக் கூற
இயற்கையின் இனிமையில்
இதயமது இசை பாட
கார்த்திகைத் தீபங்கள்
வீதியெங்கும் – புது
விழா எடுக்க
வானில் –அழகிய
வானவில் கண்டேன் !
பூவே !
புலரும் பொழுதுகள் எல்லாம்
புதுக் கார்த்திகையாக
கனவு கண்டேன் !
வாழ்க்கையின்
வசந்த கால நிலவே – நீ
வாடிவிடாதே
கோடி தீபங்களின் சுடரில் – நீ
தேடிவிடு
வாழ்வின் அர்த்தத்தை........
தேடிவரும் அலைகளின்
சேதியறிந்து செயற்படு
உனை
தழுவி நிற்கும் தென்றலின்
தாகம் அறிந்து புறப்படு !





கண்ணே,
காரிருள் போக்கும்
கார்த்திகைத் தீபங்கள் –என்
கண்களை
கொள்ளை கொண்டு
பூமியின்
புதிய பூபாளத்தின் முகவரியை
என்
இதயத்திற்கு
இரகஸ்யமாய் அறிமுகம் செய்தன !

## மௌன ஸ்வரங்கள்

உறவே
உயிரின் உயிரே
புதுக் கவிதை ஒன்று
உனது இராகங்களால்
புதிய பாடலாகி
வாழ்வில்
அரங்கேற்றமானது
நானறிந்ததே.... !
பூபாளத்தில் ஆரம்பித்து – புது
மோகனம் பாடி – நீ
ஹம்ஸத்வனியில்
லயித்த போது
வாழ்க்கை இனித்தது..... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று –
உனது இராகங்கள் – புது
வழிகாட்டலில்
உருக்குலைந்த போது
முகாரி மட்டும்
என்னுடன்
முழுமையாய்......
இணைந்து கொண்டது
நீ
மோகனம் பாடுவதாய்
எண்ணி எண்ணி
முகாரியின் ஸ்வரங்களை
அல்லவா
முழுமையாய் யாசிக்கிறாய்....
உயிரே.....
உனது இராகங்களின்
ஆக்கிரமிப்புக்குள்ளான
அற்புதமான
அழகிய
புதுக் கவிதை ஒன்று......
இன்று
அற்புத முகாரிக்குள்
முழுமையாய் மூழ்கியதில்
கண்ணீரில் நனைந்து
கவிதை ஒன்று
கலைந்து போனது...... !
அலைகள் இல்லாத
கடற்கரையென
வரைந்த கவிதை ஒன்று





கால வெள்ளத்துள்
சிதைந்து போனது..... !
நீ மட்டும்
தேடி விடாதே..... !
உனது இராகங்களின்
உன்னத லீலைகளால்
உடைந்து போனது
புதுக் கவிதையொன்று....
ஆனாலும் என்ன
வரைந்தவள் இதயம்
இனிய இதயங்களின்
இலக்கணம் என்பதால்
இந்த
வானமே மண்ணில்
வீழ்ந்த போதும்
வரைந்த கவிதை
வரிகள் ஒவ்வொன்றும்
வாசம் வீசும்..... !
பூவை – என்
இதயத்தில் நாளும்
மௌன ஸ்வரங்களில்
புது ராகம் பாடும்..... !
உயிரே
புரிந்துவிடு !
இது
புனித சந்நிதானத்தின்
புதுக் கவிதை !
நீ மட்டும்
வாடி விடாதே..... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூபாளத்துப் பூக்கள்

என் வானத்தின்
இனிய நிலவே !
முட்களின் முகம் காட்டி
முன்னெச்சரிக்கை விடுத்து
கத்திமீது
காயமின்றி நடக்க
கற்றுத் தந்த – என்
காவியக் கவியே !
உன்
நினைவுகளுடன்
உனக்குரியவள் நடக்கும் போதினில்
வழியெங்கும் பூ மழை
விழியெங்கும் தேன் மழை
உயிரே – என்
உள்ளத்தின் உன்னதமான
உணர்வுகள்
உனக்கு மட்டுமே புரியும்...... !
உன்
இதயத்தின் மோகனம்
என் காதுகளுக்குள்
இரகஸ்யமாய் கேட்டபடியே....
ஏய் என்னவனே.....
என்
இதயத்தில்
இனிய ராகமாய் – நீ
வாழ்ந்து கொண்டிருக்கிறாய் அல்லவா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் வானத்து
இளம் பிறையே !
நீ நிலவானால் – உன்
நிழலாவேன்
நிஜம் நானாவேன்..... !
அந்த வானத்தை
அண்ணாந்து பார்த்துவிடு
உனக்காகவே
விண்மீன்களை
அள்ளித் தெளித்திருக்கிறேன் !
உறவே –அவை
உன் பார்வைக்கு மட்டுமே...... !
நிலவின் ஒளியில்
தரிசிக்க முடியாத உண்மைகளை
அள்ளித் தெளித்த
வெள்ளிகளின் ஒளியில்
அறிந்து கொண்டேன் !
உன் சிரிப்பின் சத்தமும்
கண்ணீரின் ஈரமும்
மழையின் சாரலாய் –என்
மனசை நனைத்த வண்ணமே......
நீ
அழாதே –உன்
ஆழம் செறிந்த
அற்புதமான அன்பு
உண்மை
உள்ளத்திற்கு மட்டுமே புரியும் !
உறவே
அழகிய பூந்தோட்டத்தின்

அற்புத மலர்கள் எல்லாம்
உன்
ஆழமான
அன்பின் மகுடத்தை
அலங்கரிப்பதற்காய்
அணிவகுத்து நிற்பதை
அறிந்து விடு !
அமைதியாய் தூங்கிவிடு
அழகே !
பூபாளத்துப் பூக்களின்
புது ராகத்தில்
புலரும்
அதிகாலை – உனக்கு
ஆனந்தமாகட்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் உயிர்களுக்கு உருவம் கொடுக்கிறான்,
கவிஞன் கற்பனைகளுக்கு வடிவம் கொடுக்கிறான்,
இதுவரை கண்டிராத ஒருவரை எம் கண்கள் கற்பனை
செய்யமுடியுமா ?
இப்படியான ஒரு கற்பனையின் முடிவு ஏற்கனவே -
அறிந்த ஒன்றின் அறிமுகமே !
அப்படியாயிருக்கும் போது -
கவிஞனால் எப்படிப் புதுமையை.
ஆனாலும் நிறையவே......
புதுமையை வடித்துவிடுகிறான்,
பூமியை புதுமையில் நனைத்துவிடுகிறான் !
அவனே கவிஞன் !
இது மாணிலாவுக்கு அதிகம் பொருந்தும் !
ஒருவனின் சாயலில் பலரைப் படைக்கிறான்
அந்த பிரம்மன்
அட........அற்புத சக்தி படைத்தவனே
சாதிக்க முடியாததை -
சாதாரண சக்தி படைத்த கவிஞனால்
சாதிக்க முடியும் போது
இந்த கவிஞன் பிரமனிலும் உயர்ந்து விட்டான் !
பிரமன் உயிர்களை - இந்த
அழகிய பிரபஞ்சத்தில் நடமாட
அனுமதித்த வேளையில் -
உலகின் இளைய உள்ளங்களுக்கு
இனிய "றீட்மென்ட" கொடுக்கிறது
இந்த இலக்கிய இதயம் !
இந்த இதயத்தின் தாகம்
இனிதாய் நிறைவேற
இனிய வாழ்த்திசைத்து.......
இதயமார வாழ்த்துகிறேன் !

நன்றி

சோ. ஜெயச்சந்திரா
வவுனியா

வெளியீடு ;
வவுனியா கலை இலக்கிய
நண்பர்கள் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*VIJEYALUXMY Printers, Pandarikkulam, Vavuniya.*